124—

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் தாய்சேய் நலவிடுதியைக் கூடுதலாக்குதல்

*35923—**டாக்டர் சு. மணிமேகலை :**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் தற்போதுள்ள தாய்சேய் நலவிடுதிகளைக் கூடுதலாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) 1994—95ஆம் ஆண்டிற்குக் கூடுதலாகத் துணைச் சுகாதார நிலையங்கள் அமைக்க மத்திய அரசு மற்றும் மாநில அரசின் ஒப்புதல் இல்லை. ஆகவே, திருச்சி மாவட்டத்தில் தற்பொழுது புதிதாகச் சுகாதார மையங்கள் அமைக்கச் சாத்தியக்கூறு இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் சு. மணிமேகலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் இல்லை என்று சொல்லிவிட்டார். பரவாயில்லை. அட்லீஸ்ட் தற்சமயம் இயங்கிக் கொண்டிருக்கும் ஹெல்த் டிபார்ட்மெண்டும், சமூக நலத் துறையும் சேர்ந்து செயல்படுத்தும் நமது இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் 15 அம்சத் திட்டத்தில், வி.எச்.என்-களையும் ஈடுபடுத்தி பணியாற்ற ஆவன செய்வார்களா என்பது முதல் கேள்வி. அடுத்த கேள்வி, தற்சமயம் பணியாற்றும் வி.எச்.என்.-களின் செயல்திறனை அதிகரிக்கும் வகையில் அவர்களுக்கு ஊக்கத் தொகை ஏதாவது வழங்க அரசு முன் வருமா? இது இரண்டாவது கேள்வி. மூன்றாவது கேள்வி ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரே நேரத்தில் ஒரு கேள்வி, இரண்டு கேள்வி என்று போய்க் கொண்டிருக்கிறீர்கள். இரண்டாவது கேள்விக்கு அடுத்து நான் வாய்ப்புத் தருகிறேன். அமைச்சர் பதில் சொன்ன பிறகுதான் அடுத்தத் துணைக் கேள்வியைக் கேட்கவேண்டும்.

1995 மார்ச் 28]

டாக்டர் சு. மணிமேகலை : மேலும், இப்பொழுது நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆதிதிராவிடப் பள்ளிகளில் மாணவர்களின் எண்ணிக்கை 'டிராப்-அவுட்' ஆகாமல் இருப்பதற்காக உதவித் தொகை வழங்கி வருகிறார்கள். ஆகவே ஸ்கூல் ஹெல்த் புரோகிராமிலும், ஸ்டூடன்ட்ஸ் ரேஷியோ அதிகமாகி உள்ளதால் ஸ்கூல் ஹெல்த் புரோகிராம்களிலும் இந்த வி.எச்.என்.-களை ஈடுபடுத்தி அதில் பணியாற்ற அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. வி.எச்.என்.-ஐப் பொறுத்தவரை இப்பொழுது அவர்களுக்கு ஊக்கத்தொகை என்று அல்ல ; T.A., D.A., என்று வழங்கப்படுகிறது. அதோடு அவர்கள் செயல்பட்டால் ஒரு குறியீட்டை அவர்கள் எட்டிப் பிடித்தாலோ அல்லது சில வழிமுறைகளை வைத்து அவர்களுக்குச் சில பரிசுத் தொகைகளை நாம் வைத்திருக்கிறோம். அப்படித்தான் இப்பொழுது அவர்களுக்கு ஊக்கம் தரப்பட்டு வருகிறது. அதோடு பள்ளி, ஸ்கூல் ஹெல்த் புரோகிராமிலே அவர்களைச் சேர்க்க முடியுமா என்று கேட்டார்கள். அவர்களைச் சேர்ப்பதற்கான வாய்ப்பு இல்லை. காரணம், தேவையில்லை என்று கருதுகிறோம். ஸ்கூல் ஹெல்த் புரோகிராமிலே அவர்களுடைய பணி அவசியமாக இல்லை. இது முழுக்க முழுக்க ஃபேமிலி பிளானிங் அல்லது குடும்ப நலத்திட்டம் என்ற வகையிலே இது போகிற காரணத்தால் அங்கே இது அவசியமாக எங்களுக்குத் தோன்றவில்லை. எனவே, அது அவசியம் இல்லை. அதேபோல் மாண்புமிகு முதலமைச்சருடைய 15 அம்சத் திட்டத்தில் சோஷியல் வெல்பேர் டிபார்ட்மெண்டும், ஹெல்த் டிபார்ட்மெண்டும் இணைந்து பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தும் நிலை இருக்கிறது. ஏறத்தாழ 7 பொருள்கள் ஹெல்த் டிபார்மெண்ட் சம்பந்தப்பட்டது. அந்த அடிப்படையிலே, வி.எச்.என்.-கள் இப்போது அந்தப் பணிகளைச் சிறப்பாகச் செய்து வருகிறார்கள். எனவேதான் இன்றைக்கு, அநேகமாக இந்தக் குடும்ப நலத் திட்டத்திலே குறியீட்டை எட்டுவதிலே நாம் இந்தியத் துணைக் கண்டத்திலே முதலாவது இடத்திலே இருந்து கொண்டிருக்கிறோம் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். கேரளா, ஏற்கெனவே நம்மைவிட முன்னணியிலே இருக்கிறார்கள். ஆனால் மத்திய அரசு கொடுக்கிற குறியீட்டை எட்டிப் பிடிப்பதிலே நாம்தான் முதலிடத்திலே—அதாவது அவர்கள் கொடுக்கிற 'அச்சீவ்மென்ட்'டை முடிப்பதிலே—நாம்தான் முதலிடத்திலே இருந்து கொண்டிருக்கிறோம்.

[1995 மார்ச் 28

முற்பகல் 10-25

டாக்டர் சு. மணிமேகலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடும்ப நலத்திட்டத்திலே நாம் முதலிடத்தில் இருக்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மிக்க நன்றி. அதே சமயத்தில், இப்போது dread disease என்று சொல்லப்படும் 'எய்ட்ஸ்'—க்கும் அடுத்ததாக இப்போது நாம் மும்முரமாக இயக்கிக் கொண்டிருக்கும் Blindness Control Programme—க்கும் வி.எச்.என்.–களுக்குப் பயிற்சி அளித்து — ஏனென்றால், தாய்சேய் நல விடுதியிலே, அவர்களெல்லாம் வருகிற 'சான்ஸ்' இருப்பதனால்— மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படும் வகையில், அவர்களுக்கு ஏதேனும் பயிற்சி அளிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வி.எச்.என்.—களுக்கு ஏற்கெனவே நிறைய பணிகளை, நாம் அவர்களிடத்திலே கொடுத்திருக்கிறோம். அதோடு குடும்ப நலப் பணி என்பது மிக முக்கியமான ஒன்று. அதிலே, மிகுந்த கவனத்தை தமிழக அரசு செலுத்தி வருகிறது. எனவே, அவர்களுக்குக் கூடுதலான சுமையைச் செலுத்துகிறபோது, அவர்களுக்கு அந்தப் பணியிலே கொஞ்சம் தொய்வு ஏற்பட்டு விடக்கூடாது என்ற காரணத்தினால், அதனை மாற்றியமைக்க நாம் தயாராக இல்லை. எய்ட்ஸைப் பொறுத்தவரை, நாம் இப்போது பிரச்சாரத்தின் மூலமாக, மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி, அதைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டுமேயொழிய, வேறுவகையிலே நாம் செய்ய முடியாது, எனவே, ஏறத்தாழ 50 ஆயிரம் விழிப்புணர்வு முகாம்கள் நடத்துவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதாவது, ஒவ்வொரு ஒன்றியத்திலேயும் குறைந்தபட்சம் 100 இடங்களிலே, அதேபோல் ஒவ்வொரு நகரத்திலேயும் குறைந்தபட்சம் 100 இடங்களிலே, மொத்தமாகப் பார்த்தால், நகரம், ஒன்றியம் என்று கணக்கெடுத்து, 500 என்று வைத்தால், 50 ஆயிரம் என்ற கணக்கை நாம் வைத்திருக்கிறோம். 50 ஆயிரம் இடங்களிலே, 6 மாத காலத்திற்குள்ளே, இந்த விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட வேண்டும் என்று நாம் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். விழிப்புணர்வு முகாம் என்றால், அதைப் பற்றி, அதாவது 'ஹெல்த் மெஸேஜ்' அத்தனையையும் பொதுமக்களுக்குப் போய்ச் சேர்கிற வகையிலே வீடியோ கேஸட்ஸ் மற்றும் நாடகங்கள் என்று இப்படிப்பட்ட பிரச்சாரங்களின் மூலமாகச் செய்ய இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்களும், அதிலே பொறுப்பு எடுத்துக் கொண்டு, அதைச் செயல்படுத்துவதற்கு முன்வரவேண்டுமென்று நான் இந்த

நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். காரணம், எதிர்காலத்திலே, இது ஒரு மிகப்பெரிய சூனியமான நிலையை உருவாக்கிவிடுமோ என்ற அச்சநிலையின் காரணமாக, இதிலே அரசாங்கம் மிகவும் கவனம் எடுத்துக் கொண்டிருக்கிறது. அதேபோல், blindness control-ஐப் பொறுத்தவரை, ஒரு வேகமான நடவடிக்கையை எடுத்து, இரண்டாயிரம் ஆண்டிலே, நாம் "அச்சீவ்' செய்ய வேண்டும் என்ற அந்த 'டார்கெட்'-ஐ இன்னும் இரண்டு, மூன்று ஆண்டுகளுக்குள்ளே நாம் முடித்துவிட வேண்டுமென்ற முயற்சியை எடுத்து, இப்போது Eye Camp -ஐ, நாம் நடத்தத் துவங்கியிருக்கிறோம். 6 மாத காலத்திற்குள்ளே, 'பேக்—லாக்' என்னென்ன இருக்கிறதோ, அத்தனை கேஸ்களையும் முடிக்க வேண்டும் என்ற ஒரு திட்டத்தை வகுத்து, நாம் அவர்கள் கையிலே கொடுத்திருக்கிறோம். இப்போது அவர்கள் அதைச் செய்து கொண்டிருக்கிறார்கள். பிப்ரவரி மாதம் 24-ஆம் தேதி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பிறந்த நாள் அன்று, அந்தத் திட்டத்தை நாம் துவக்கினோம். அன்றைக்கே, ஏறத்தாழ 7 ஆயிரம் பேருக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டு, கண் அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டிருக்கிறது. எனவே, அது சிறப்பாகச் செய்யப்படுகிறது. அந்த நோயாளிகளைக் கண்டு பிடிப்பதற்காக, 'ஐடன்டிபை' செய்வதற்காக சில பேருக்கு நாங்கள் பயிற்சிக் கொடுத்திருக்கிறோம். அது Male Health Worker-ஆக இருந்தால் சரியாக இருக்குமென்று தேடிப் பிடித்து, அவர்களுக்கு அந்தப் பயிற்சியைக் கொடுத்து, அந்தப் பயிற்சியின் மூலமாக அவர்கள் இப்போது நமக்கு அந்த நோய்களைக் கண்டுபிடித்துக் கொடுக்கிறார்கள். எனவே, வி.எச்.என்.-களை, அதிலே இருந்து மாற்றுவது சரியாக இருக்காது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 125, டாக்டர் பிட்ரிக்ஸ் டி' சோசா, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்.

125—

PROTECTING NILGIRI TAHR IN WESTERN GHAT FORESTS

*23396— **Dr. BEATRIX D' SOUZA :**

Will the Hon. the Minister for Transport and Forests be pleased to state :-

(a). Whether the Government is aware that poaching is rampant in the Western Ghat Forests and the Nilgiris Tahr (IBEX) is in danger ?

(b) if so, steps taken to prevent poaching ?